ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ரு’தி$_3$ ॥

## நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ அந்தாமத்தன்பு ॥

*This document** has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அந்தாமத்தன்பு ॥

## இறைவன் ஆபரணாதிகளுடன் வந்து கலக்க ஆழ்வார் மகிழ்தல்

‡அந்தாமத்தன்பு செய்து⋆ என்னாவி சேர் அம்மானுக்கு⋆
அந்தாம வாழ் முடி சங்கு⋆ ஆழி நூல் ஆரம் உள⋆
செந் தாமரைத் தடம் கண்⋆ செங்கனி வாய் செங்கமலம்⋆
செந் தாமரை அடிக்கள்⋆ செம் பொன் திரு உடம்பே (1)

திரு உடம்பு வான் சுடர்⋆ செந் தாமரை கண் கை கமலம்⋆
திருவிடமே மார்வம்⋆ அயன் இடமே கொப்பூழ்⋆
ஒருவிடமும் எந்தை பெருமாற்கு⋆ அரனேயோ⋆
ஒருவிடம் ஒன்றின்றி⋆ என்னுள் கலந்தானுக்கே (2)

என்னுள் கலந்தவன்⋆ செங்கனி வாய் செங்கமலம்⋆
மின்னும் சுடர் மலைக்கு⋆ கண் பாதம் கை கமலம்⋆
மன்னு முழுவேழ் உலகும்⋆ வயிற்றினுள⋆
தன்னுள் கலவாதது⋆ எப்பொருளும் தான் இலையே (3)

எப்பொருளும் தானாய்⋆ மரதகக் குன்றம் ஒக்கும்⋆
அப்பொழுதைத் தாமரைப் பூக்⋆ கண் பாதம் கை கமலம்⋆
எப்பொழுதும் நாள் திங்கள்⋆ ஆண்டூழி ஊழிதொறும்⋆
அப்பொழுதைக்கப்பொழுது⋆ என் ஆரா அமுதமே (4)

ஆரா அமுதமாய்⋆ அல்லாவியுள் கலந்த⋆
காரார் கருமுகில் போல்⋆ என்னம்மான் கண்ணனுக்கு⋆
நேரா வாய் செம் பவளம்⋆ கண் பாதம் கை கமலம்⋆
பேர் ஆர நீள் முடி நாண்⋆ பின்னும் இழை பலவே (5)

பல பலவே ஆபரணம்⋆ பேரும் பல பலவே⋆
பல பலவே சோதி வடிவு⋆ பண்பெண்ணில்⋆
பல பல கண்டுண்டு⋆ கேட்டுற்றுமோந்தின்பம்⋆
பல பலவே ஞானமும்⋆ பாம்பணை மேலாற்கேயோ (6)

www.prapatti.com

பாம்பணைமேல் பாற்கடலுள்⋆ பள்ளி அமர்ந்ததுவும்⋆
காம்பணை தோள் பின்னைக்கா⋆ ஏறுடன் ஏழ் செற்றதுவும்⋆
தேம் பணைய சோலை⋆ மராமரம் ஏழ் எய்ததுவும்⋆
பூம் பிணைய தண் துழாய்ப்⋆ பொன் முடியும் போர் ஏறே (7)

பொன் முடியம் போர் ஏற்றை⋆ எம்மானை நால் தடந் தோள்⋆
தன் முடிவொன்றில்லாத⋆ தன் துழாய் மாலையனை⋆
என் முடிவு காணாதே⋆ என்னுள் கலந்தானை⋆
சொல் முடிவு காணேன் நான்⋆ சொல்லுவதென் சொல்லீரே (8)

சொல்லீர் என்னம்மானை⋆ என்னாவி ஆவிதனை⋆
எல்லையில் சீர்⋆ என் கருமாணிக்கச் சுடரை⋆
நல்ல அமுதம்⋆ பெறற்கரிய வீடுமாய்⋆
அல்லி மலர் விரை ஒத்து⋆ ஆண் அல்லன் பெண் அல்லனே (9)

ஆண் அல்லன் பெண் அல்லன்⋆ அல்லா அலியும் அல்லன்⋆
காணலும் ஆகான்⋆ உளன் அல்லன் இல்லை அல்லன்⋆
பேணுங்கால் பேணும்⋆ உருவாகும் அல்லனுமாம்⋆
கோணை பெரிதுடைத்து⋆ எம் பெம்மானைக் கூறுதலே (10)

‡கூறுதல் ஒன்றாராக்⋆ குடக் கூத்த அம்மானைக்⋆
கூறுதலே மேவிக்⋆ குருகூர்ச் சடகோபன்⋆
கூறின அந்தாதி⋆ ஓர் ஆயிரத்துள் இப்பத்தும்⋆
கூறுதல் வல்லார் உளரேல்⋆ கூடுவர் வைகுந்தமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com